டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்...
எண்ணிய முடிதல் வேண்டும்...

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 128 02.11.2025 SUNDAY IPPASI : 16 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 128 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி : 16 விலை : ரூ.5/–

3 திருப்பூர் நெடுஞ்சாலை துறைக்கு உட்பட்ட காங்கேயம் சாலைகளில் மரக்கன்றுகள் நடும் திட்டப்பணி

4 என்னை கட்சியிலிருந்து நீக்கியதை எதிர்த்து வழக்கு தொடர்வேன்: செங்கோட்டையன்

2 'கடந்த 6 மாதங்களாகவே கட்சிக்கு எதிராகத் தான் இருந்தார்' செங்கோட்டையன் நீக்கம்; இபிஎஸ் விளக்கம்

# உலகில் எங்கு பாதிப்பு ஏற்பட்டாலும் முதலில் உதவிக்குச் செல்லும் நாடு இந்தியா: பிரதமர் மோடி

ராய்ப்பூர்: நவ.2-

உலகில் எங்கு பாதிப்பு ஏற்பட்டாலும் முதலில் உதவிக்குச் செல்லும் நாடு இந்தியா என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கரின் நவ ராய்ப்பூரில் பிரம்ம குமாரிகள் அமைப்பின் தியான மையமான சாந்தி ஷிகார்ஜ பிரதமர் நரேந்திர மோடி இன்று திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, "இன்று உலகில் எங்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டாலும், எங்கு ஒரு பேரழிவு ஏற்பட்டாலும் உதவி வழங்க ஒரு நம்பகமான கூட்டாளியாக இந்தியா உள்ளது. இந்தியா எப்போதும் உதவிக்கு முதலில் செல்கிறது.

ஒவ்வொரு உயிரினத்திலும் கடவுளைக் காண்பவர்கள் நாம். நமது பாரம்பரியத்தில், உலகம் செழிக்கட்டும், அனைத்து உயிரினங்களிடையேயும் நல்லெண்ணம் மேலோங்கட்டும் என்ற பிரார்த்தனையுடன்தான் எந்த ஒரு மத நிகழ்வும் முடிவடைகிறது.

மாநிலங்களின் வளர்ச்சியில்தான் இந்தியாவின் வளர்ச்சி இருக்கிறது. இந்தியாவை வளர்ச்சி பெற வைப்பதற்கான பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.




வளர்ந்த இந்தியாவை உருவாக்கும் இந்த பயணத்தில் பிரம்ம குமாரிகள் போன்ற அமைப்புகள் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. நான் பல பத்தாண்டுகளாக உங்கள் அனைவருடனும் தொடர்பில் இருக்கிறேன். நான் இங்கு விருந்தினராக வரவில்லை. நான் உங்களில் ஒருவன்.

இன்றைய நாள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இன்று சத்தீஸ்கர் நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைகிறது. ஜார்க்கண்ட், உத்தராகண்ட் மாநிலங்களும் இன்று 25 ஆண்டுகளை நிறைவு செய்கின்றன. இந்த மாநில மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்தார்.

முன்னதாக, நவ ராய்ப்பூரில் உள்ள ஸ்ரீசத்ய சாய் சஞ்சீவனி மருத்துவமனையில் இதய நோய்களால் பாதிக்கப்பட்டு வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்பட்ட 2,500 குழந்தைகளுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். இதில், முன்னாள் இந்திய கிரிக்கெட் கேப்டன் சுனில் கவாஸ்கர் கலந்து கொண்டார்.



■ முதலமைச்சர் உத்தரவின் படி, திருச்சி மாநகராட்சிக்குட்பட்ட பஞ்சப்பூர் முதல் கருமண்டபம் வரை புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில்,அங்குமேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டுஅப்போது பணிகள்அனைத்தையும்விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனைகளைவழங்கினார்.இந்நிகழ்வில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் சு.சிவராசு,மாவட்டஆட்சித்தலைவர் வே.சரவணன் , மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்காதாரிணி , நகர பொறியாளர் சிவபாதம் ஆகியோருடன் மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



■ திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மலைக்கோட்டை பகுதி 21_வது வார்டு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தேவர் ஹாலில் உங்களுடன் ஸ்டாலின் முகாமினை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி இனிகோஇருதயராஜ்எம்.எல்.ஏஇணைந்து பொதுமக்களுக்கு பட்டாக்களைவழங்கினர்.இந்நிகழ்வில் கிழக்கு மாநகரச் செயலாளர் மதிவாணன், மாவட்ட வருவாய் அலுவலர்ராஜலட்சுமி,வருவாய் அலுவலர் விக்னேஷ்,மாநகராட்சி துணைஆணையர்ஜெயபாரதி, இளநிலைப் பொறியாளர் கார்த்திக்,வேல்முருகன், பகுதிச் செயலாளர் மருந்துக் கடை மோகன்,மாமன்ற உறுப்பினர் மும்தாஜ்பேகம்,வட்டச்செயலாளர்கள் முபாரக், ராஜா, நிர்வாகிகள், அரசு அதிகாரிகள்உடனிருந்தனர்.

# ஆத்தூர் தொகுதியில் தகுதியுள்ள நபர்களுக்கு ஒருபைசா செலவில்லாமல் அரசு பணி வழங்கப்படும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி

## விளையாட்டு துறையில் சாதனை படைத்த மாணவனை பாராட்டி வாழ்த்தினார்

சின்னாளபட்டி, நவ.2-

ஆத்தூர் தொகுதியில் தகுதியுள்ள நபர்களுக்கு ஒருபைசா செலவில்லாமல் அரசு பணி வழங்கப்படும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளித்ததோட விளையாட்டு துறையில் சாதனை படைத்த மாணவனை பாராட்டி வாழ்த்தினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களிடம் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த பொது மக்கள் மற்றும் கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிட்டார். அப்போது மருத்துவ துறையில் தற்காலிக பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டவர்கள் மகப்பேறு விடுப்பு மற்றும் உறவினர்களின் மருத்துவ சிகிச்சைக்காக விடுப்பு எடுத்தவர்களை மீண்டும் பணியில் அமர்த்தாமல் புதிதாக தற்காலிக பணியாளர்களை நியமனம் செய்திருப்பதாக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் பணியாளர்கள் புகார் செய்தனர்.



மேலும் வட்டார மருத்துவ அதிகாரி ஒப்புதல் அளித்தும் மாவட்ட சுகாதாரத்துறையை சேர்ந்த அதிகாரிகள் வேண்டுமென்றே தற்காலிக பணியாளர்களை அலைக்கழிப்பு செய்வதாக ஆத்தூர் தொகுதி பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகளிடமிருந்து புகார் வந்ததை அடுத்து சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஆத்தூர் தொகுதியை பொறுத்தவரை அரசு நிரந்தர பணியாக இருந்தாலும் தற்காலிக பணியாக இருந்தாலும் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை காக்கும் வண்ணம் ஒரு பைசா செலவில்லாமல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மருத்துவத்துறையை சேர்ந்த அதிகாரிகள் மட்டும் தற்காலிக பணியாளர்கள் மீது வெறுப்பு காட்டுவதாக தெரிகிறது. இந்த நிலைமை இனி நீடிக்க கூடாது என்றதுடன் இதே நிலைமை நீடித்தால் முதல்வரிடம் புகார் செய்வேன் எச்சரித்தார். தங்களது கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றி கொடுத்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு பாதிக்கப்பட்டவர்கள் மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர். நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பேரூராட்சி மன்ற தலைவர் அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், சீவல்சரகு ராணி ராஜேந்திரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர்கள் வசந்தகுமார், சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், 7வது வார்டு திமுக நிர்வாகிகள் நரசிங்கம், வீரபாண்டி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

அழையுங்கள்! வாசகர்களே!!
தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)
88705 00000
sakkraviyugam2025@gmail.com

# பெரம்பலூர் எம்.எல்.ஏவுக்கு "வாக்குறுதி நிறைவேற்ற வக்கில்ல" பிஜேபி மாவட்ட பொதுச் செயலாளர் உமாஹைமாவதி பரபரப்பு பேட்டி!

பெரம்பலூர், நவ.2-

திமுகவைச் சேர்ந்த பெரம்பலூர் எம்.எல்.ஏ. பிரபாகரன் தனது சொந்த ஊருக்கு கூட, சாலை வசதிகள் அமைத்துக் கொடுக்காமல், மேம்போக்காக போய்க் கொண்டிருக்கிறார் என்று பலதரப்பட்ட மக்களும் பேசிக் கொண்டிருக்கும் நிலையில், இது பற்றி பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட பொது செயலாளர் உமாஹைமாவதி என்பவரிடம் பேசிய போது:

பெரம்பலூர் தொகுதி எம்எல்ஏ பிரபாகரன் தனது சொந்த ஊரான தேவையூர் கிராமத்திற்கு சாலை வசதி கூட அமைக்க முடியாமல்





வருமானத்தை கண்ணாக கொண்டுள்ளார்.

சொகுசு காரில் வலம் வரும் பெரம்பலூர் எம்எல்ஏ பிரபாகரன் மக்களுக்காக உழைப்பவரா?. சேறும், சகதியுமாக இருக்கும் சாலையினால், அந்தப் பகுதியில் உள்ள 300 குடும்பங்களுக்கு, தற்போதைய மழைக்காலங்களில் தொற்றுநோய் பரவுவதற்கு கண்டிப்பாக பெரிய அளவில் வாய்ப்பு உள்ளது. பெரம்பலூர் தொகுதி எம்எல்ஏ பிரபாகரன், எதிர்வரும் சட்டமன்றத் தேர்தல் சமயத்தில், ஊர் பக்கம் வந்தால் நாக்கை பிடுங்கும் அளவிற்கு கேள்வி கேட்டு விரட்டி அடிக்க வேண்டும் என்று தனது ஆதங்கத்தை கொட்டி தீர்த்தார் பிஜேபி மாவட்ட பொதுச் செயலாளர் உமாஹைமாவதி.




# கரூரில் 2வது நாளாக சிபிஐ அதிகாரிகள் ஆய்வு: போக்குவரத்து முடங்கியதால் பொதுமக்கள் வாக்குவாதம்

கரூர், நவ.02-

கரூர் வேலுச்சாமி புரத்தில் இன்று காலை இரண்டாவது நாளாக சிபிஐ அதிகாரிகள் 3டி ஸ்கேனர் உதவியுடன் காலை 7 மணி முதல் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். ஆய்வு நடைபெறும் இடம் இடம் கரூர் ஈரோடு சாலை என்பதால் அப்பகுதியில் இருந்து பணிக்கு செல்லும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் தடுப்பு வேலி அமைத்திருந்தனர். இதனால் மக்கள் போலீஸாருடனும், சிபிஐ அதிகாரிகளுடனும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 27ம் தேதி நடைபெற்ற தவெக பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேல் 110 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கரூர் நகர காவல் ஆய்வாளர் மணிவண் ணன் அளித்த புகாரின் பேரில் தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், இணைச் செயலாளர் நிர்மல் குமார், மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் உள்ளிட்டோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

உச்ச நீதிமன்ற உத்தரவின்படி இந்த வழக்கின் விசாரணை சிபிஐ வசம் ஒப்படைக்கப்பட்டது. இதையடுத்து குஜராத்தை சேர்ந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவீன் குமார் தலைமையிலான சிபிஐ அதிகாரிகள் கடந்த மாதம் 17ம் தேதி முதல் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் வெள்ளிக்கிழமை காலை சிபிஐ அதிகாரிகள் வேலுச்சாமி புறத்தைச் சேர்ந்த கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் விசாரணை மேற்கொண்டனர்.

இதையடுத்து காலையில் வேலுச்சாமி புரத்திற்கு சென்ற சிபிஐ அதிகாரிகள் அங்கு சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு நவீன கருவியான 3டி லேசர் ஸ்கேனருடன் ஆய்வு செய்தனர். ஆய்வின்போது போக்குவரத்து இடையூறு ஏற்படாத வகையில் கரூர் ஈரோடு சாலையில் முனியப்பன் கோயிலில் இருந்து கோதூர் பிரிவு சாலை வரை தடுப்பு வேலைகள் அமைக்கப்பட்டது. மேலும் பாதுகாப்புக்காக கரூர் நகர துணை காவல் கண்காணிப்பாளர் செல்வராஜ் தலைமையில் நகர காவல் ஆய்வாளர் மணிவண்ணன் உள்ளிட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டடனர். தொடர்ந்து அங்கு பாரா போக்கஸ் என்னும் 3பீ ஸ்கேனர் கருவியுடன் ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும் அப்பகுதியில் தரைக்கடை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் சம்பவம் நடந்தது குறித்து விசாரணை மேற்கொண்டனர். மேலும் கடை உரிமையாளர்களிடம் தங்களது கடைகளில் சிசி டிவி கேமரா பொருத்தப்பட்டிருந்தால் கேமராவில் பதிவான பதிவுகளை தங்களிடம் வழங்கும்படி கேட்டுக் கொண்டனர். தொடர்ந்து மாலை 5.30 மணி வரை அதிகாரிகள் விசாரணை மற்றும் ஆய்வுகள் மேற்கொண்ட பின்னர் தாங்கள் தங்கியிருக்கும் பொதுப்பணி துறையின் சுற்றுலா மாளிகைக்கு சென்றனர்.

தொடர்ந்து இரண்டாவது நாளாக சனிக்கிழமை காலை 7 மணிக்கு சிபிஐ அதிகாரிகள் வேலுச்சாமி புரத்திற்கு சென்று வெள்ளிக்கிழமை நடத்திய ஃபாரோபோக்கஸ் கருவி மூலம் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொண்டனர். கரு வழக்கில் எஸ்ஐடி குழு மற்றும் தனி நபர் குழு மற்றும் பொதுமக்கள் அளித்த பல்வேறு வாக்குமூலங்கள் அடிப்ப டையிலும், வீடியோ ஆதாரங்களின் அடிப்படையிலும் அவற்றினை ஒப்பீடு செய்வதற்காக சிபிஐ அதிகாரிகள் வீடியோ ஆதாரங்களை மிகத் துல்லியமாக ஒப்பீடு செய்யும் 3டி லேசர் ஸ்கேனர் கருவியை பயன்படுத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் வாக்குவாதம்: சிபிஐ அதிகாரிகள் சம்பவம் நடைபெற்ற இடத்தினை அங்குலம் அங்குலமாக 3டி ஸ்கேனர் லேசர் கருவியுடன் அளவீடு செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் சிபிஐ அதிகாரிகள் பணிகள் மேற்கொள்ளும் இடம் கரூர் ஈரோடு சாலை என்பதால் அப்பகுதியில் இருந்து பணிக்கு செல்லும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் தடுப்பு வேலி அமைத்திருந்தனர்.

இதனால் அலுவலகங்கள் மற்றும் வேலைக்கு விரைவில் செல்ல முடியாமல் பொதுமக்கள் அவதிப்பட்டதால் தடுப்பு வேலியை அகற்றுமாறு சிபிஐ அதிகாரிகள், போலீஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போலீஸார் அவர்களை சமாதானம் செய்து மாற்று வழியாக கோவை சாலைக்கு அனுப்பி வைத்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# ‘கடந்த 6 மாதங்களாகவே கட்சிக்கு எதிராகத் தான் இருந்தார்’ செங்கோட்டையன் நீக்கம்; இபிஎஸ் விளக்கம்




சென்னை, நவ.02-

“கடந்த 6 மாதங்களாகவே செங்கோட்டையன் கட்சிக்கு எதிராகத் தான் இருந்தார் என்றும் கட்சிவிரோத செயலில் ஈடுபட்டதால் செங்கோட்டையன் நீக்கப்பட்டுள்ளார்.” என்றும் அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும் போது, “அத்திக்கடவு அவிநாசி திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்ததற்காக கட்சி சார்பற்ற விழாவில் நான் பங்குபெற்றேன். ஆனால் செங்கோட்டையன் பங்கேற்காமல் சென்றுவிட்டார். அந்த நிகழ்ச்சியில், முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா புகைப்படங்கள் இல்லை. அதனால்தான் பங்கேற்க வில்லை என்று செங்கோட்டையன் கூறினார்.

ஆனால், தமிழக அரசின் இலவச சைக்கிள் கொடுக்கும் விழாவில் செங்கோட்டையன் பங்கேற்றார். அந்த விழாவில் கருணாநிதி, ஸ்டாலின் புகைப்படங்கள்தான் இருந்தன. சைக்கிள் கொடுக்கும் விழாவில் எங்கே ஜெயலலிதா படம்?. கடந்த ஆறு மாதங்களாகவே கட்சிக்கு எதிராக தான் இருந்தார் செங்கோட்டையன்.

அதிமுகவிலிருந்து பிரிந்து சென்றவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்று செங்கோட்டையன் கூறுகிறார். ஆனால், செங்கோ ட்டையன் சொல்பவர்கள் எல்லாம் பிரிந்து சென்றவர்கள் இல்லை. கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டவர்கள்.

பொதுக்குழு முடிவே இறுதியானது. பொது க்குழு முடிவை மீறி செங்கோட்டையன் செயல்பட்டார். 10 ஆண்டுகளுக்கு முன்பே கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர் டிடிவி தினகரன். ஜெயலலிதா இருந்தவரை இருக்கும் இடம் தெரியாமல் இருந்தவர் டிடிவி தினகரன். ஜெயலலிதாவால் நீக்கப்பட்டவர் அதிமுகவை குறித்து பேச அருகதை கிடையாது.

செங்கோட்டையன் கோடநாடு விவகாரம் குறித்து பேசியதைப் பார்த்தேன். கோடநாடு விவகாரத்தில் அதிமுக காலத்தில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவரை எல்லாம் கட்சியில் வைத்திருந்தால் என்ன ஆகும். அவருக்கு உள்ளுக்குள் எவ்வளவு வன்மம் இருந்திருக்கும். சட்டப்பேரவையில் திமுகவை எதிர்த்து ஒரு வார்த்தை கூட செங்கோட்டையன் பேசியதில்லை. கட்சிக்கு எதிராக செயல்பட்டால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்.

ஜெயலலிதா இருக்கும்போது செங்கோட்டையனின் அமைச்சர் பதவி, மாவட்டச் செயலர் பதவி பறிக்கப்பட்டது. நான் பொறுப்பேற்ற போதுதான், செங்கோட்டையனை மீண்டும் அமைச்சராக்கினேன். ஓபிஎஸ் கட்சிக்கு உண்மையாக இல்லை. சில நாட்களுக்கு முன்பு ஓபிஎஸ்ஸும், அவரது மகனும் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து பூங்கொத்து கொடுத்தார்கள். ஜெயலலிதா இருந்திருந்தால் இப்படி செய்திருப்பார்களா? இப்படி கட்சிக்கு விரோதமாக செயல்படுபவர்களை எப்படி கட்சியில் இணைக்க முடியும்?

ஓபிஎஸ் எப்படிப்பட்டவர் என்பதை மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்பவர்கள்தான் ஓபிஎஸ், செங்கோட்டையன் போன்றோர். திமுகவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வர செங்கோட்டையன் தினகரன், ஓபிஎஸ் ஆகியோர் திட்டமிட்டு வருகின்றனர். அவர்கள் திமுகவின் ‘பி’ டீம், திமுகவிடம் சரணடைந்துவிட்டனர். கட்சிவிரோத செயலில் ஈடுபட்டதால் தான் செங்கோட்டையன் நீக்கப்பட்டுள்ளார்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




# தாயுமானவர் திட்டத்தில் நவ.3 முதல் 6 வரை வீடு வீடாக ரேஷன் பொருட்களை விநியோகிக்க உத்தரவு

சென்னை, நவ.02-

முதல்வரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் நவ.3 முதல் 6ம் தேதிவரை, முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் இல்லங்களுக்குச் சென்று ரேஷன் பொருட்களை விநியோகிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சென்னை மண்டல கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் சா.பாபு நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் முதல்வரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்று திறனாளிகளின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று பொது விநியோகத் திட்ட பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நவ. 3ம் தேதி முதல் 6ம் தேதி வரை சென்னையில் அண்ணாநகர், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர், தேனாம்பேட்டை, அடையாறு, திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க.நகர், அம்பத்தூர், கோடம்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் ஆகிய 15 மண்டலங்களில், கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் 990 ரேஷன் கடைகளின் விற்பனையாளர்கள், அத்தியாவசியப் பொருட்களை வீடு தேடி சென்று விநியோகிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த தகவலை அனைத்து ரேஷன் கடைகளிலும் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில், தகவல் பலகையில் எழுதிவைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருநெல்வேலி மாவட்ட அளவில் சிலம்பப் போட்டி வி.எஸ். ஆர்.பள்ளி மாணவன் வெண்கல பதக்கம் பெற்று சாதனை

நெல்லை, நவ.02-

திருநெல்வேலி மாவட்ட அளவில் சிலம்பப் போட்டி நடைபெற்றது. விளையாட்டு கழகம், திருநெல்வேலி அமைச்சர் சிலம்ப நிறுவனமும் இணைந்து நடத்தியது. இப்போட்டியானது பாளையங்கோட்டை வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மாவட்ட அளவில் அனைத்து பள்ளிகளும் மாணவர்கள் கலந்து கொண்டனர். வி.எஸ்.ஆர். பள்ளி ஆறாம் வகுப்பு மாணவன் விபின் சுதன் 14 வயதிற்கு உட்பட்ட, ஒற்றைக்கம்பு சுற்றுதல் போட்டியில் வெண்கல பதக்கம் பெற்று சாதனை. மாணவனை பள்ளி தாளாளர் வி.எஸ். ஆர். ஜெகதீஷ் பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார். பள்ளி முதல்வர் விஜயா தினகரன் மற்றும் உடற் கல்வி ஆசிரியர்கள் மாணவனை பாராட்டி வாழ்த்தினர்.

# நெல் கொள்முதலும், நகர்வும் துரிதமாக நடைபெற்று வருவதாக அமைச்சர் சக்கரபாணி விளக்கம்

சென்னை, நவ.02-

நுகர்பொருள் வாணிப கழகத்தின் நெல் போக்குவரத்து, ஒப்பந்த விதிகளின்படி முறையாக செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் சக்கரபாணி தெரிவித்துள்ளார். நெல் கொள்முதலும், நகர்வும் துரிதமாக நடைபெற்று வருவதாக அமைச்சர் சக்கரபாணி விளக்கம் அளித்துள்ளார். திமுக அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக நெல் போக்குவரத்து கட்டணம் வெகுவாக குறைந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

# மணல் ஊழல் பற்றி விசாரிக்க திமுக அரசு அஞ்சுவது ஏன்? அன்புமணி

சென்னை, நவ.02-

மணல் ஊழல் பற்றி வழக்கு தொடர்ந்து விசாரிக்க திமுக அரசு அஞ்சுவது ஏன்? என்றும் பெருந்தலைகள் உருளும் என அச்சமா? என்றும் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டில் ரூ.4,730 கோடி அளவுக்கு நடைபெற்றுள்ள ஆற்று மணல் கொள்ளை ஊழல் தொடர்பாக தாங்கள் அனுப்பிய ஆதாரங்களின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும் என்ற அமலாக்கத் துறையின் கோரிக்கையை ஏற்க முடியாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் திமுக அரசு தெரிவித்திருக்கிறது.

தமிழகத்தில் மிகப்பெரிய அளவில் நடைபெற்று வரும் மணல் கொள்ளை ஊழல் குறித்து குழந்தைகளுக்குக் கூட தெரிந்திருக்கும் நிலையில், அது குறித்து விசாரிக்க அரசு மறுப்பது கண்டிக்கத்தக்கது. தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் மணல் கொள்ளை குறித்தும், அதன் மூலம் ஈட்டப்படும் பல்லாயிரம் கோடி பணம் சட்டவிரோதமாக பரிமாற்றம் செய்யப்படுவது குறித்தும் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் கடந்த 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 5 மாவட்டங்களில் உள்ள 28 மணல் குவாரிகளில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது.

செயற்கை கோள் உதவியுடன் நடத்தப்பட்ட அந்த சோதனையில், ரூ.4730 கோடி மதிப்புள்ள 22.70 லட்சம் யூனிட் மணல் கொள்ளையடிக்கப் பட்டிருப்பதைக் கண்டுபிடித்தது.

ஆனால், தமிழக அரசிடம் இது குறித்து விசாரணை நடத்திய போது, ரூ.36 கோடி அளவுக்க் மட்டுமே மணல் எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அரசால் கணக்கு காட்டப்பட்டதை விட 131 மடங்கும், மணல் அள்ள அனுமதிக்கப்பட்ட பரப்பான 190 ஹெக்டேரை விட 5 மடங்கு அதிகமாக 987 ஹெக்டேரிலும் ஆற்று மணல் அள்ளப்பட்டிருப்பதை ஆய்வின் மூலம் கண்டறிந்த அமலாக்கத்துறை, அதற்கான ஆதாரங்கள் அனைத்தையும் திரட்டி, அதனடிப்படையில் வழக்குப் பதிவு செய்யும்படி கடந்த ஆண்டு ஜூன் 13 ஆம் தேதி தமிழக காவல்துறை தலைமை இயக்குநருக்கு கடிதம் எழுதியது.



அதனடிப்படையில், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், இது தொடர்பாக அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்த போது தான் தமிழ்நாடு அதன் நிலைப்பாட்டைத் தெரிவித்திருக்கிறது.

தமிழ்நாட்டில் மணல் கொள்ளை தொடர்பாக அமலாக்கத்துறை சில ஆதாரங்களை அனுப்பி, அதனடிப்படையில் வழக்கு தொடர வேண்டும் என்று கூறினால், அதை அப்படியே செய்வதற்கு தாங்கள் ஒன்றும் அஞ்சல் நிலையம் அல்ல என்றும் தமிழ்நாடு அரசு கூறியிருக்கிறது.

ஆனால், உயர்நீதிமன்றத்தின் முன்வைத்த வாதங்களில், தமிழகத்தை விட பிற மாநிலங்களில் அதிகளவில் மணல் கொள்ளை நடந்ததாக திமுக அரசு தெரிவித்திருக்கிறதே தவிர, தமிழ்நாட்டில் மணல் கொள்ளை நடக்க நடக்கவில்லை என்று எந்த இடத்திலும் கூறவில்லை. இதன் மூலம் தமிழ்நாட்டில் மணல் கொள்ளை நடந்திருப்பதை திமுக அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

மணல் கொள்ளை குறித்து அமலாக்கத்துறை அளித்த ஆதாரங்களின் அடிப்படையில் வழக்குத் தொடரும்படி மாநில அரசை கட்டாயப்படுத்த முடியுமா, முடியாதா? என்ற சட்ட நுணுக்கங்கள் ஒருபுறம் இருக்கட்டும். ஒரு மாநிலத்தின் இயற்கை வளத்தை அழிக்கும் வகையில் நடத்தப்படும் மணல் கொள்ளையை தடுக்க வேண்டிய தார்மீகக் கடமையும், அதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பும் அந்த மாநிலத்தை ஆளும் அரசுக்கு இருக்கிறதா, இல்லையா? என்பது தான் பா.ம.க. எழுப்பும் வினாவாகும்.

தமிழ்நாட்டில் மணல் கொள்ளை நடப்பது உலகமே அறிந்த உண்மை. தமிழ்நாடு அரசு வெளியிட்ட புள்ளி விவரங்களின் வாயிலாக அதை நம்மால் உறுதி செய்து கொள்ள முடியும். தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை வெளியிட்ட 2024 25ஆம் ஆண்டுக்கான திட்டச் சாதனை ஆவணத்தின் 117-ஆம் பக்கத்தில் 31.03.2023ஆம் தேதியுடன் முடிந்த ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள 23 மணல் குவாரிகளில் ஒரு யூனிட் ரூ.1000 வீதம் மொத்தம் ரூ.22.21 கோடி வருவாய் ஈட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால், மொத்தம் 2.22 லட்சம் யூனிட் மணல் விற்பனை செய்யப்பட்டுள்ளது; ஒரு சரக்குந்தில் 3 யூனிட் மணல் ஏற்றப்படுவதாக வைத்துக் கொண்டால் ஆண்டு முழுவதும் 73,033 சரக்குந்து அளவுக்கும், தினமும் 202 சரக்குந்து அளவுக்கும் மணல் விற்கப்பட்டுள்ளது. மொத்தம் 23 குவாரிகள் உள்ள நிலையில் ஒரு குவாரியில், ஒரு நாளைக்கு 8.81 சரக்குந்து அளவுக்கு மட்டுமே மணல் விற்பனை செய்யப்பட்டிருப்பதாக இந்த புள்ளிவிவரங்கள் தெரிவித்திருக்கின்றன.

தமிழ்நாட்டில் எந்த மணல் குவாரிக்கு, எந்த நேரத்தில் போனாலும் குறைந்தது 5 கி.மீ தொலைவுக்கு சரக்குந்துகள் காத்துக்கிடப்பதை பார்க்க முடியும். அத்தகைய நிலையில், ஒரு நாளைக்கு ஒரு குவாரியில் 8 சரக்குந்து அளவுக்கு மட்டுமே மணல் அள்ளப்படுவதாக தமிழ்நாடு அரசு கூறுவதைக் கேட்டால் உலகமே சிரிக்கும்.

ஆற்று மணல் மட்டுமல்ல... தென் மாவட்டங்களில் இருந்து கேரளத்திற்கு மிகப்பெரிய அளவில் கனிம வளங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. கடந்த மாதம் நாகர்கோவிலில் இருந்து திருவனந்தபுரம் நோக்கி நான் மகிழுந்தில் பயணம் செய்த ஒன்றரை மணி நேரத்தில் குறைந்தது 900 சரக்குந்துகள் கனிம வளங்களை கேரளத்தில் இறக்கிவிட்டு மீண்டும் கனிமவளங்களை ஏற்றுவதற்காக நெல்லை, தென்காசி மாவட்டங்களுக்கு சென்றதை பார்க்க முடிந்தது.

இதிலிருந்தே தென் மாவட்டங்களில் எந்த அளவுக்கு கனிமக் கொள்ளை நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும். தென் மாவட்டங்களில் கனிமக் கொள்ளையில் ஈடுபடும் கனிமக் கொள்ளையர்களை ஆளுங்கட்சியைச் சேர்ந்த காட்பாதர் ஒருவர் பாதுகாக்கிறார்; அந்த காட்பாதரை முதலமைச்சர் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார். அதனால் தான் கனிமக்கொள்ளை கட்டுப்படுத்தப்படவில்லை.

ஆற்று மணல் கொள்ளை தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் இப்படி ஒரு நிலைப்பாட்டை எடுத்திருப்பதன் மூலம், தமிழ்நாட்டில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் நடைபெற்ற பணி நியமன ஊழல்கள் தொடர்பாக அமலாக்கத்துறை அனுப்பியுள்ள ஆதாரங்களில் அடிப்படையில் வழக்கு தொடராமல் தவிர்க்க திமுக அரசு முயல்கிறது.

ஆற்று மணல் கொள்ளை, கனிமக் கொள்ளை, பணி நியமன ஊழல் உள்ளிட்ட எந்த ஊழல் குறித்து விசாரணை நடத்தப்பட்டாலும் திமுகவின் பெருந்தலைகள் கைது செய்யப்பட்டு சிறை செல்ல நேரிடும் என்ற அச்சம் காரணமாகவே திமுக அரசு வழக்கு தொடர மறுத்து வருகிறது.

ஊழலுக்கு எதிராக திமுக அரசு கட்டி வைத்திருக்கும் அதிகாரத் தடுப்பணை இன்னும் 4 மாதங்களில் தகர்த்தெறியப்படும். அதன்பின் நடத்தப்படும் விசாரணையில் கனிமக் கொள்ளை உள்ளிட்ட அனைத்து ஊழல்களிலும் தொடர்புடைய அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படப்போவது உறுதி” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



■ தூத்துக்குடியில் அமைந்துள்ள தெய்வீகத் திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118 வது ஜெயந்தி விழாவில் பா.ஜ.க தூத்துக்குடி வடக்கு மாவட்ட வணிக ஒருங்கிணைப்பு குழு மாவட்ட நிர்வாகி திருமதி முத்துமாரி அறிவழகன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பொழுது அருகில் பா ஜ க மாவட்ட நிர்வாகிகள் உள்ளன



# பாரதிய ஜனதா கட்சியினர் ஆர்பாட்டம்

திண்டுக்கல், நவ.02-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம் 19 வது வார்டு அண்ணாநகர் பகுதியில் பாதுகாப்பு சுவர் இடிந்து விழுந்து சுமார் பதினைந்து நாட்களுக்கு மேல் ஆகியும் நகராட்சி நிர்வாகம் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதன் காரணமாக சுமார் நான்கு குடும்பங்கள் ஆபத்தான முறையில் குடியிருந்து வருகிறார்கள் ஆகவே மக்களுக்கு பயன் இல்லாத நகராட்சியை பூட்டு போடுவதாக கூறி பாரதிய ஜனதா கட்சியினர் ஆர்பாட்டம் செய்தனர். மேலும் இடிந்த இடத்தை ஆய்வு செய்து உயிர்ப்பலி ஆவதற்கு முன்னதாக,



துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இல்லையென்றால் பொதுமக்களை ஒன்று சேர்த்து மிகப்பெரிய ஆர்பாட்டம் மேற்கொள்வோம் என்றும் அக்கட்சியின் திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணைத் தலைவர் டாக்டர் மதன்கு மார் கோரிக்கை வைத்துள்ளார்.சுமார் ஒரு மணி நேரம் நடந்த ஆர்பாட்டத்தில் காவல் ஆய்வாளர் பாஸ்கரன் தலையிட்டு துரித நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாக ஒப்புக்கொண்டதின்பேரில் ஆர்பாட்டம் கைவிடப்பட்டது. ஆர்பாட்டத்தில் பாரதிய ஜனதா கட்சியின் நகரதலைவர் சரவணன்,நகர பொதுச் செயலாளர் மணிவாசவன் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.





# தேசிய வினாடி வினா போட்டி தேசிய அளவில் இரண்டாம் இடம்: திசையன்விளை ஜெயந்திநாதர் மரைன் கல்லூரி மாணவருக்கு 1.5 லட்சம் பரிசு வழங்கி மத்திய அமைச்சர் சாந்தனு தாக்கூர் பாராட்டு

திசையன்விளை, செப்.02-

தேசிய அளவிலான வினாடி வினா போட்டியில் திசையன்விளை அரசூர் பூச்சிக்காடு, ஜெயந்திநாதர் மரைன் கல்லூரி மாணவருக்கு 1.5 லட்சம் பரிசு கிடைத்துள்ளது. இந்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும், டிஜி ஷிப்பிங் மற்றும் சியாமா பிரசாத் முகர்ஜி துறைமுக கழகம், கொல்கத்தா சார்பில், தேசிய அளவிலான மரைன் எக்ஸ் எம் பி ஏ வினாடி வினா போட்டி, இரண்டு சுற்றுகளாக ஆன்லைன் மூலம் நடந்தது. முதல் சுற்றில் 7500 பேர் கலந்துகொண்டு, 200 பேர் இரண்டாம் சுற்றிற்கு தேர்வானார்கள். இதில் ஜெயந்திநாதர் மரைன் கல்லூரி மாணவர்கள் 10 பேர் தேர்வானார்கள். இரண்டாவது சுற்றில் 200 பேர் கலந்துகொண்டு பத்து மாணவர்கள் இறுதி சுற்றிற்கு தேர்வானார்கள். இதில் ஜெயந்திநாதர் கல்லூரி மாணவர் ரெயின் இறுதி சுற்றிற்கு தேர்வானார். இறுதிப்போட்டி கடந்த அக்டோபர் 30 ல் மும்பையில் நடைபெற்றது. இப்போட்டியில் மரைன் கல்லூரி மட்டுமல்லாமல், இந்தியாவின் தலைசிறந்த முன்னணி பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் ஐடிஐ மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் ஜெயந்திநாதர் மரைன் கல்லூரி பி.எஸ்.சி நாட்டிகல் சயின்ஸ், முதலாம் ஆண்டு மாணவர் ரெயின் பங்கேற்று தேசிய அளவில் இரண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்தார். போட்டியில் வெற்றி பெற்ற மாணவருக்கு பரிசுத்தொகை 1.5 லட்சத்திற்கான காசோலையை, மத்திய கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் ஸ்ரீ சாந்தனு தாக்கூர் வழங்கினார். வெற்றி பெற்ற மாணவருக்கு பயிற்சி அளித்த கல்லூரி இணைக்கல்வி ஆலோசகர் அந்தோணி விஜய் பாபு மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் ஆலோசகர் ஸ்டெயின்ஸ் ஸ்பர்ஜன் ஆகியோரையும், கல்லூரி சேர்மன் வி. எஸ். கணேசன், செயலாளர் எஸ். ஜி ராஜேஷ், முதல்வர் ஷாகிர் உசேன், துணை முதல்வர் ராஜசேகர், கல்லூரி நிர்வாகப் பிரதிநிதி ஆன்றோ எபிபனி, கேப்டன்கள், இன்ஜினியர்கள், ஆபிஸர்கள், ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் பாராட்டினர்.

# சின்னாளபட்டி மேட்டுப்பட்டி இராமநாதபுரம் சாலையில் செயல்படும் 3144 அரசு மதுபானக் கடை அருகே அதிகாலை முதல் மதுபானங்கள் விற்பனை - பொதுமக்கள் பள்ளி மாணவர்கள் அவதி

சின்னாளபட்டி, நவ. 02-

சின்னாளபட்டி மேட்டுப்பட்டி இராமநாதபுரம் சாலையில் செயல்படும் 3144 அரசு மதுபானக் கடை அருகே அதிகாலை முதல் மதுபானங்கள் விற்பனை செய்வதால் பொதுமக்கள் பள்ளி மாணவர்கள் அவதிபடுகின்றனர். டாஸ்மாக் பாரில் விடிய, விடிய மது விற்பனை செய்வதால் சாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாக தமிழக வாழ்வுரிமை கட்சிகள் புகார் செய்கின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி மேட்டுப்பட்டி ஸ்ரீ ஏ.இராமநாதபுரம் செல்லும் சாலையில் மயானம் எதிரே 3144 எண் கொண்ட அரசு மதுபானக் கடை செயல் பட்டு வருகிறது. இந்த கடையுடன் இணைந்த பாரில் மதுபானங்கள் விடிய, விடிய விற்பனை செய்யப்படுவதாக அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் புகார் செய்கின்றனர். இதுதவிர அந்த சாலை வழியாக காலை நேரங்களில்



சின்னாளபட்டியில் உள்ள பள்ளிகளுக்கு வரும் ஏ.இராமநாதபுரம், நடுப்பட்டி, கதிர்பட்டி, குரும்பபட்டி சேர்ந்த பள்ளி மாணவர்கள் குடிமகன்களால் பாதிக்கப்படுகின்றனர். இதுதவிர மாலை நேரங்களில் மதுபானைக் கடைகளுக்கு வரும் குடிமகன்கள் சாலையில் தங்களது இரு சக்கர வாகனத்தை நிறுத்தி விட்டு செல்வதால் போக்குவரத்து இடையூறு ஏற்படுகிறது. இரவு நேரங்களில் எண்: 3144 அரசு மதுபானக் கடையை மூடிய பிறகு அதன் அருகே செயல்படும் பாரில் விடிய, விடிய மதுபானங்கள் விற்க்கப்படுவதாக கூறப்படுகிறது. இதனால் சாயப்பட்டறை மற்றும் பிரிண்டிங் பட்டறையில் வேலை செய்யும் கூலி தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் அதிகாலையிலேயே மது அருந்தும் நிலைமைக்கு தள்ளப்பட்டு தங்களது வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றனர். இதுகுறித்து ஆத்தூர் ஒன்றிய தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் எஸ்.வேளாங்கண்ணி கூறுகையில் முன்பு அதிகாலை நேரங்களில் எதிரே மயானத்தில் வைத்து மதுபானங்களை விற்பனை செய்தனர். இப்போது 3144 எண் கொண்ட டாஸ்மாக் கடை பின்புறம் விடிய, விடிய மதுபானங்களை விற்பனை செய்கின்றனர். இதனால் காலை நேரங்களில் வரும் பள்ளி மாணவர்களும், மாலை நேரங்களில் வேலையை முடித்துவிட்டு தங்கள் கிராமத்திற்கு செல்லும் கூலித்தொழிலாளி பெண்களும் கடும் அவதி படுகின்றனர். அதிகாலையிலேயே அப்பகுதியைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் மது பானங்களை குடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுத்து அதிகாலை நேரங்களில் மதுபானைக் கடை அருகே மதுபானங்கள் விற்பனை செய்வதை தடை செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து மாவட்ட டாஸ்மாக் நிர்வாகத்திற்கு புகார் அனுப்பவும் முடிவு செய்துள்ளார்.

# மதுரை மாவட்ட தலைவர் அ.இளங்கோ அறிக்கை



மதுரை, நவ.02-

மதுரை மாவட்டம் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் சார்பாக கோயமுத்தூரில் வருகின்ற 01.11.2025 சனிக்கிழமை அன்று நடைபெற உள்ள முப்பெரும் விழாவில் மதுரை மாவட்டத்தின் சார்பாக மாவட்ட தலைவர் அவர்களின் தலைமையில் மாவட்ட,வட்டக் கிளை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு மதுரை மாவட்ட தலைவர் அ.இளங்கோ அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். தமிழர் அரசு அலுவலர் ஒன்றியம் மதுரை மாவட்டம் மையம்

## திண்டுக்கல் காளியம்மன் கோயில் குடமுழுக்கு விழாவை ஒட்டி பஞ்சம்பட்டி சுங்கச்சாவடி மைதானத்தில் அன்னதானம் தர அனுமதி

மதுரை, நவ.02-

திண்டுக்கல் காளியம்மன் கோயில் குடமுழுக்கு விழாவை ஒட்டி பஞ்சம்பட்டி சுங்கச்சாவடி மைதானத்தில் அன்னதானம் தர ஐகோர்ட் கிளை அனுமதி வழங்கி உள்ளது. சட்ட ஒழுங்கு பிரச்சனை என்ற பெயரில் அடிப்படை உரிமையை மறுக்க இயலாது என்று உயர்நீதிமன்ற மதுரை கிளை தெரிவித்துள்ளது. சமூதாய அமைதி என்பது மதநல்லிணக்கத்தின் மூலம் மட்டுமே நிலைக்கும் என்றும் ஐகோர்ட் கிளை கருத்து தெரிவித்துள்ளது.



# திருப்பூர் நெடுஞ்சாலை துறைக்கு உட்பட்ட காங்கேயம் சாலைகளில் மரக்கன்றுகள் நடும் திட்டப்பணி

திருப்பூர், நவ.02-

திருப்பூர் வடக்கு உட்கோட்டத்தைச் சார்ந்த மாநில நெடுஞ்சாலையான, திருப்பூர் காங்கேயம் வண்ணான்துறைபுதூர் அருகில் நெடுஞ் சாலைத்துறை மூலம் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு, கண்காணிப்பு பொறியாளர் A.S.விஸ்வநாதன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. உடன் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட பொறியாளர் E.ரத்தினசாமி, தரக்கட்டுப்பாட்டு கோட்ட பொறியாளர் M.கிருஷ்ணமூர்த்தி, உதவிக் கோட்ட பொறியாளர் S. கவிதா மற்றும் உதவி பொறியாளர் P.ஜெயபிரகாஷ் ஆகியோர் உடனிருந்தனர்.







# தென்நாடு மக்கள் கட்சி சார்பில் முப்பெரும் விழா

திருப்பூர், நவ.02-

திருப்பூர் பழைய பேருந்து நிலையம் வளாகத்தில் தென்நாடு மக்கள் கட்சி சார்பாக ராஜராஜ சோழன் சதய விழா மற்றும் மாமன்னர் மருது பாண்டியர் குருபூஜை விழா தேசியத்தையும் தெய்வீகத்தையும் இரு கண்களாக பாவித்த பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் ஜெயந்தி விழா என முப்பெரும் விழா நடைபெற்றது இதில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தலைவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு பின்பு ஆயிரத்திற்கும் மேற்பட்டவருக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் விழா மாநில பொதுச் செயலாளர் செந்தில் வாண்டையார் தேவர் தலைமையிலும் நிறுவனத் தலைவர் முகவை மாவீரன் கணேச தேவர் முன்னிலையிலும் நடைபெற்றது சிறப்பு அழைப்பாளர்களாக பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் எம் எஸ் எம் ஆனந்தன்.

திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கே என் விஜயகுமார்.திருப்பூர் மாவட்ட தேவர் பேரவை தலைவர் சீனிவாசன் தேவர். அகில இந்திய மூவேந்தர் முன்னணி கழகத்தின் மாநில பொதுச்செயலாளர் வீ.டி.பாண்டியன் தேவர். அம்மா பேரவை துணைச் செயலாளர் சொர்க்கம் நீதி ராஜன்,அகில இந்திய பார்வர்டு பிளாக் மாவட்ட பொதுச்செயலாளர் தேனி கே காளிமுத்து தேவர்.ராஜராஜ சோழன் பண்பாட்டு கழக மாவட்ட தலைவர் இறை ஆர் வெங்கடேஷ், அகில இந்திய பசும்பொன் முன்னணி கழக மாநில பொருளாளர் அய்யனார்.

பசும்பொன் பக்தர்கள் பேரவை நிறுவனர் ராயல் லட்சுமணன் தேவர். பசும்பொன் தேசியக் கழக மாவட்ட செயலாளர் காசிராஜன். மாவட்டத் தலைவர் கண்ணன், இந்திய ஜனநாயக கட்சியின் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பாரி கணபதி, இந்து மக்கள் கட்சி மாநிலச் செயலாளர் வேலு.

மனிதநேய ஜனநாயக கட்சி திருப்பூர் மாவட்ட செயலாளர் ராஜா முகமது. தமிழக வெற்றிக்கழக மண்டல பொறுப்பாளர் மணி, தீரன் சின்னமலை பேரவை மாவட்ட தலைவர் கார்த்திக் கவுண்டர், சின்னம்மா பேரவை சுவை பாலு.அதிமுக பகுதி செயலாளர் சிவளா தினேஷ். பாஜக மகளிர் அணி நிர்மலா நாச்சியார், திமுக தொண்டரணி மணி. உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் விழாவினை துவக்கி வைத்தனர் தென்நாடு மக்கள் கட்சி மாநகர் மாவட்ட பொறுப்பாளர் தினா. மாநகர மாவட்ட தலைவர் குமார் விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர் நிர்வாகிகள் மாநில பொருளாளர் காளிமுத்து தேவர்,மாநில தலைமை நிலைய செயலாளர் அன்பு விஸ்வராயர்,மாநில செயற்குழு உறுப்பினர் சுதாகர் தேவர், மாநில தொழிற்சங்க துணைத் தலைவர் மாரியப்ப தேவர், திருப்பூர் மாவட்ட நிர்வாகிகள் குமார், சௌந்தரபாண்டியன், பொன்ராம்தேவர், இளையராஜா, பழனிசாமி. சக்திவேல், தினேஷ்குமார், நாகராஜன் மாரிமுத்து,பாண்டித்துரை. சதீஷ். தினேஷ். சரவணன். தீலிப்,ஸ்ரீராம். ,பார்த்தசாரதி .ரவின்பிரதீப், மதன்குமார், உள்ளிட்ட நிர்வாகிகள் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்,,,,



# தஞ்சையில் மாமன்னன் ராஜராஜ சோழனின் 1040வது சதய விழா: அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை

தஞ்சாவூர், நவ.02-

உலகப் புகழ்பெற்ற தஞ்சாவூர் பெரிய கோயிலை கட்டிய மாமன்னன் ராஜராஜசோழனின் 1040 வது சதய விழாவை முன்னிட்டு இன்று அரசு மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

உலகமே வியக்கும் அளவுக்கு தஞ்சாவூர் பெரிய கோயிலை கட்டிய மாமன்னன் ராஜராஜ சோழனின் 1040வது சதய விழா நேற்று காலை தொடங்கியது. தொடர்ந்து கருத்தரங்கம், கவியரங்கம், பரதநாட்டியம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதையடுத்து சதய விழாவின் முக்கிய நிகழ்வாக இன்று காலை திருக்கோயிலில் பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கப்பட்டது. பின்னர், திருமுறை நூல்களை அலங்கரிக்கப்பட்ட யானை மீது வைத்து 100க்கும் அதிகமான ஓதுவாமூர்த்திகளுடன் கோயிலிருந்து புறப்பட்டு நான்கு ராஜ வீதிகளில் வீதியுலா நடைபெற்றது.

தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் சார்பில், கோயிலுக்கு வெளியே உள்ள ராஜராஜசோழன் சிலைக்கு தஞ்சாவூர் எம்பி ச.முரசொலி, மாவட்ட ஆட்சியர் மா.பிரியங்கா பங்கஜம், மேயர் சண்.ராமநாதன், அரண்மனை தேவஸ்தான அறங்காவலர் சி.பாபாஜி ராஜா போன்ஸ்லே, தருமபுரம் ஆதீனம் 27 வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் ஞானசம்பந்தர் பரமாச்சாரிய சுவாமிகள், சதய விழா குழு தலைவர் து.செல்வம், அறநிலையத்துறை உதவி ஆணையர் கோ. கவிதா உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சியினர், இயக்கத்தினர், தமிழ் அமைப்புகள் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து பெருவுடையார் மற்றும் பெரியநாயகி அம்மனுக்கு மஞ்சள், சந்தனம், பால், தயிர், இளநீர் உள்ளிட்ட 39 வகையான மங்களப் பொருட்களால் பேரபிஷேகம் நடைபெற்றது.


விழாவுக்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம், இந்து சமய அறிநிலையத்துறை, அரண்மனை தேவஸ்தானம், இந்து சமய அறநிலையத்துறையினர் இணைந்து செய்தனர்.

# தமிழக மாணவர்களின் மேற்படிப்பு தொடர்பாக கோவி.செழியனுடன் ஆஸ்திரேலிய அமைச்சர் சந்திப்பு

சென்னை, நவ.02-

ஆஸ்திரேலிய பல்கலைக் கழகங்களில் தமிழக மாணவர் களின் மேற்படிப்பு வாய்ப்பு களை எளிதாக்குவது தொடர்பாக உயர் கல்வி அமைச்சர் கோவி.செழியனை சந்தித்து, ஆஸ்திரேலிய கல்வி அமைச் சர் டோனி புட்டி ஆலோசனை நடத்தினார்.

இது தொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப் பதாவது: நவீன தொழில்நுட்பத்துக்கு ஏற்ப மாணவர்களை ஊக்கப் படுத்துவதுடன் மேலை நாடு களில் உள்ள உயர்தர கல்வி யையும் தமிழக மாணவர்கள் பயில வேண்டும் என்ற உன்னத நோக்கில் அரசு செயல்பட்டு



வருகிறது. அந்த வகையில், மேற்கு ஆஸ்திரேலிய முதன்மை பல் கலைக்கழகங்களுடன் இணைந்து செயல்படுவதற்கான முன்னெடுப்புகளை தமிழக அரசு மேற்கொண்டுள் ளது. இந்நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியனை, மேற்கு ஆஸ்திரேலியாவின் வர்த்தகம், சர்வதேச பல்கலைக் கழக கல்வி, குடியுரிமை மற்றும் பல்லின கலாச்சார நலன்கள் துறை அமைச்சர் டோனி புட்டி நேற்று சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பில், கல்வி ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக் கப்பட்டது.

இதன் முக்கிய அம்சமாக, மேற்கு ஆஸ்திரேலியாவின் மேம்பட்ட பாடத்திட்டங்களை தமிழகத்தில் உள்ள கல்லூரி களில் அறிமுகம் செய்வது, தமிழக மாணவர்கள் மேற்படிப்புக்காக மேற்கு ஆஸ் திரேலியா செல்வதற்கான வாய்ப்புகளை எளிதாக்குவது மற்றும் இருதரப்பு கல்வி பரிமாற்றத் திட்டங்களை செயல் படுத்துவது குறித்து விரிவான செயல் திட்டம் தயாரிக்கப் பட்டு அதை விரிவாக ஆய்வு செய்து முடிவெடுக்கலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பின்போது, தமிழக உயர்கல்வித் துறை செயலர் பொ.சங்கர், சென்னையில் உள்ள ஆஸ்திரேலிய துணைத் தூதர் சிளை ஜாக்கி, மேற்கு ஆஸ்திரேலிய வர்த்தக ஆணை யர் இயன் மார்டின்ஸ் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடனிருந்தனர். இவ்வாறு அதில் கூறப்பட் டுள்ளது.



# தெலங்கானா அமைச்சராக அசாருதீன் பதவி ஏற்றார்

ஹைதராபாத், நவ.02-

தெலங்கானா மாநில அமைச்சராக முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் முகமது அசாருதீன் நேற்று பதவி பிரமாணம் செய்து கொண்டார்.

இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரரான முகமது அசாருதீன் ஹைதராபாத் ஆளுநர் மாளிகையில் நேற்று காலை அமைச்சராக பதவி பிரமாணம் செய்து கொண்டார்.

அவருக்கு தெலங்கானா மாநில ஆளுநர் ஜிஷ்னுதேவ் வர்மா பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். மிகவும் எளிமையான முறையில் நடைபெற்ற இந்த விழாவில் தெலங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி மற்றும் அமைச்சர்கள் பங்கேற்றனர். அதன் பின்னர் அமைச்சர் அசாருதீன் செய்தியாளர்களிடம் அசாருதீன் கூறியதாவது:

அமைச்சர் பதவி அளித்த தற்காக காங்கிரஸ் கட்சியின் மேலிடத்திற்கும், முதல்வர் ரேவந்த் ரெட்டிக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். என் மீது பாஜக, பிஆர்எஸ் கட்சிகள் வீண் பழியை சுமத்துகின்றன. என் மீது உள்ள எவ்வழக்குகளிலும் குற்றம் நிரூபனம் ஆகவில்லை. இவ்வாறு அசாருதீன் கூறினார்.

# ஆர்டிஐயில் மனு பெற டிஎன்பிஎஸ்சி புதிய வசதி

சென்னை, நவ.02-

தகவல் பெறும் உரிமை சட்டத்தின்கீழ் மனுக்களை இணையவழியில் பெறும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி செயலாளர் எஸ் .கோபால சுந்தரராஜ் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: தேர்வர்களுக்கான சேவைகளை இணைவழியில் வழங்கும் விதமாக தகவல்பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனுக்களை இணையவழியில் பெறும் வசதி தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தேர்வர்கள் இச்சட்டத்தின்கீழ் மனுக்கள் மற்றும் மேல்முறையீட்டு மனுக்களை https://rtionline.tn.gov.in/ என்ற இணையதளத்தை பயன்படுத்தி இணையவழியில் சமர்ப்பிக்கலாம். எனவே, தேர்வர்கள் தகவல் பெறும் உரிமை சட்டத்தின்கீழ் மனுக்கள் மற்றும் மேல் முறையீடுகளை தேர்வாணை யத்துக்கு தபால் மூலம் அனுப்புவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கூறியுள்ளார்.



# தஞ்சாவூரில் மாமன்னன் ராஜராஜ சோழனின் 1040வது சதய விழா தொடக்கம்

தஞ்சாவூர், நவ.02-

தஞ்சாவூரில் மாமன்னன் ராஜராஜ சோழனின் 1040வது சதய விழா நேற்று தொடங்கியது. இதையொட்டி நடைபெற்ற பரத நாட்டியம் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் ஏராளமானோர் பங்கேற்றனர். பெரிய கோயிலை கட்டிய மாமன்னன் ராஜராஜ சோழனின் 1040வது சதய விழா தஞ்சாவூரில் நேற்று தொடங்கியது.

இதையொட்டி, நேற்று காலை அரண்மனை வளாகத்தில் இருந்து புறப்பட்ட நாட்டுப்புறக் கலைஞர்களின் ஊர்வலத்தை எம் .பி. முரசொலி, எம்எல்ஏ துரை.சந்திரசேகரன், மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். இதில் ஏராளமான நாட்டுப்புறக் கலைஞர்கள் பங்கேற்று, கலை நிகழ்ச்சிகளை நடத்தியபடி ஊர்வலமாக பெரிய கோயில் வரை வந்தனர்.

தொடர்ந்து, பெரிய கோயில் வளாகத்தில் 400 கலைஞர்கள் பங்கேற்ற பரத நாட்டிய புஷ்பாஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர், மேடை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமை வகித்தார். சதய விழாக் குழுத் தலைவர் து.செல்வம் வரவேற்றார். முன்னாள் எம்எல்ஏ எம்.ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். திருவாவடுதுறை ஆதீனம் 24 வது குருமகா சந்நிதானம் அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்கினார்.

விழாவில், மாவட்ட எஸ்.பி.ராஜாராம், அரண்மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா போன்ஸ்லே, அறநிலையத் துறை இணை ஆணையர் ஜோதிலட்சுமி, முன்னாள் நகர்மன்றத் தலைவர் சி.இறைவன், மண்டல கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் ராஜாராம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பின்னர், கருத்தரங்கம், கவியரங்கம், 1,040 பேர் பங்கேற்ற பரதநாட்டியம், வில்லுப்பாட்டு, வரலாற்று நாடகம் ஆகியவை நடைபெற்றன. 2வது நாளான இன்று (நவ. 1) காலை மங்கல இசையுடன் நிகழ்ச்சி தொடங்குகிறது. தொடர்ந்து, கோயில் பணியாளர்களுக்கு புத்தாடை வழங்கும் நிகழ்ச்சி, ராஜ ராஜ சோழன் சிலைக்கு அரசு மற்றும் பல்வேறு கட்சிகள், அமைப்புகள் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி, ராஜவீதிகளில் திருமுறை பண்ணுடன் 100க்கும் மேற்பட்ட ஓதுவா மூர்த்திகளின் வீதியுலா நடைபெற உள்ளன. தொடர்ந்து, பெருவுடையார், பெரியநாயகி அம்மனுக்கு பேரபிஷேகம், பெருந்தீப வழிபாடு நடைபெறும். மாலையில் இன்னிசை நிகழ்ச்சி, தேவார பண்ணிசை, சுவாமி வீதியுலா, விருது வழங்கும் விழா உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.



# திருச்சி தெற்கு மாவட்ட திமுக சார்பில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” கூட்டம்

## அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி பங்கேற்பு

திருச்சி, நவ.2-

திருச்சி தெற்கு மாவட்ட திமுக சார்பில், கிழக்கு சட்டமன்ற தொகுதியில், கிழக்கு மாநகரம் கலைஞர் நகர் பகுதி அன்பில் தர்மலிங்கம் தெருவில் வார்டு எண்.64 பாகம் எண். 250 ல் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு பேசுகையில், அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும், இந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் பயன்பெற்ற பயனாளிகளை அடையாளம் காண வேண்டும், சரியான புதிய வாக்காளர்களை சேர்க்கவும், தவறுதலான போலியான வாக்காளர்களை நீக்கவும் துரிதமாக பணியாற்ற வேண்டும். இல்லங்கள் தோறும் அரசின் சாதனைகள் குறித்த துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். கூட்டத்தில் கிழக்கு மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன், தொகுதி பார்வையாளர் கதிரவன், பகுதி கழகச் செயலாளர் மணிவேல், வட்டக் கழகச் செயலாளர் ஆனந்த் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# என்னை கட்சியிலிருந்து நீக்கியதை எதிர்த்து வழக்கு தொடர்வேன்: செங்கோட்டையன்

கோபி, நவ.02-

“என்னை கட்சியிலிருந்து நீக்கியதால் நான் மிகுந்த வருத்தமடைந்துள்ளேன். கண்ணீர் சிந்தும் நிலையில் இருக்கிறேன். என்னை நீக்கியது தொடர்பாக வழக்கு தொடர்வேன். இபிஎஸ் தற்காலிக பொதுச் செயலாளர். அதிமுக ஒன்றிணைந்தால் தான் வெற்றி பெற இயலும்.” என்று செங்கோட்டையன் தெரிவித்துள்ளார். மேலும், துரோகத்துக்கு ஒரு நோபல் பரிசு கொடுக்க வேண்டுமானால் அதை எடப்பாடி பழனிசாமிக்கு தான் கொடுக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதிமுகவிலிருந்து முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனை நீக்கி, பழனிசாமி நேற்று உத்தரவிட்டார். இந்த உத்தரவு எதிர்பார்க்கப்பட்டது என்றாலும் கூட தமிழக அரசியலில் தேர்தல் காலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இது குறித்து ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டி பாளையத்தில் இன்று காலை செய்தியாளர்களை சந்தித்த செங்கோட்டையன், “அதிமுகவில் 1972ல் இருந்து பணியாற்றியவன் நான். எம்ஜிஆருடன் எனது பயணத்தைத் தொடங்கி 1975ல் கோவையில் முதல் பொதுக் குழுவை சிறப்பாக நடத்தி அவரது பாராட்டைப் பெற்றவன்.

அதன் பின்னர் ஜெயலலிதாவின் வழியில் இந்த இயக்கத்துக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டவன். ஜெயலலிதா கைகாட்டிய பாதையில் தடம் புரளாமல், சலனத்துக்கு இடம் தராமல் பணியாற்றிய விசுவாசி நான். அதை அவரே பல தருணங்களில் குறிப்பிட்டு என்னைப் பாராட்டியுள்ளார். அவர்கள் இருவரின் காலத்திலும், அதற்குப் பின்னரும் கூட இந்த இயக்கம் வலுவாக இருக்கவே பணியாற்றினேன்.

ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் இந்த இயக்கம் உடைந்துவிடக் கூடாது என்பதற்காகவே எனக்குக் கிடைத்த வாய்ப்புகளை இரண்டு முறை நான் விட்டுக் கொடுத்தேன். எடப்பாடி பழனிசாமி முதல்வர் பதவியை எப்படிப் பெற்றார் என்பதை இந்த நாடறியும். அப்படிப்பட்ட நிலையில், அதிமுக பொதுச் செயலாளராக இபிஎஸ் பொறுப்பேற்ற பின்னர், அவர் எடுத்த பல்வேறு முடிவுகளின் காரணமாக கட்சி தேர்தல்களில் வெற்றி வாய்ப்பை தொடர்ந்து இழந்ததை நாம் பார்த்து வருகிறோம். எம்ஜிஆர் தேர்தல் தோல்வி அறியாதவர். ஜெயலலிதா ஒரு முறை தோல்வியடைந்தால்



அடுத்த முறை வெற்றியை வசமாக்கிவிடுவார்.

அவரது மறைவுக்குப் பிறகு, 4 ஆண்டு காலம் ஆட்சி நடந்தது. ஆனால், அதன்பின்னர் அதிமுக வெற்றி வாய்ப்புகளைப் பெறவில்லை. இதனால் துயரத்துடன் இருந்த அதிமுகவினரின் கருத்துகளை நாங்கள் 6 பேர் இபிஎஸ்ஸிடம் எடுத்துரைத்தோம். அதிமுக ஒருங்கிணைய வேண்டும் என்பதே தொண்டர்களின் உணர்வு என்பதை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினேன்.

அதிமுகவை ஒன்றிணைக்கவே நான் தேவர் ஜெயந்தி அன்று டிடிவி தினகரன், ஓபிஎஸ்ஸை சந்தித்தேன். அதற்குக் கிடைத்த பரிசுதான் நான் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. எடப்பாடி பழனிசாமி கட்சிக்கு வருவதற்கு முன்னரே நான் அதிமுகவில் இருந்தவன். கட்சியில் சீனியர் என்ற முறையில் எனக்கொரு நோட்டீஸாவது அனுப்பியிருக்க வேண்டும். நான் கட்சியிலிருந்து நீக்கப்பட்டது வருத்தமளிக்கிறது. கண்ணீர் சிந்தும் நிலையில் உள்ளேன். கட்சியிலிருந்து என்னை நீக்கியது தொடர்பாக வழக்கு தொடர்வேன். இபிஎஸ் தற்காலிக பொதுச் செயலாளர் தான்.

மேலும் கொடநாடு வழக்கில் அவர் ஏ1 என்பதை மறந்துவிட்டு, என்னை திமுகவின் ‘பி’ டீம் என்று விமர்சித்து வருகிறார். யார் ‘பி’ டீம் என்பதை நாடறியும். துரோகத்துக்கு ஒரு நோபல் பரிசு கொடுக்க வேண்டுமானால் அதை எடப்பாடி பழனிசாமிக்கு தான் கொடுக்க வேண்டும். மீண்டும் அதிமுகவை ஒன்றிணைத்தால் தான் வெற்றி பெற இயலும்.” எனத் தெரிவித்தார்.

# தெரு நாய்களை கட்டுப்படுத்தும் வழக்கில் தலைமைச் செயலர்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, நவ.02-

தெரு நாய்கள் விவகாரத்தில் பதில் மனு தாக்கல் செய்யாத தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் நவம்பர் 3ம் தேதி நேரில் ஆஜராக வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தெரு நாய்கள் தொல்லை தொடர்பாக உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொண்டுள்ளது. இந்த வழக்கு கடந்த 27ம் தேதி விசாரணைக்கு வந்த போது, பதில் மனு தாக்கல் செய்யாத தமிழ்நாடு உள்ளிட்ட மாநில தலைமைச் செயலாளர்கள் நவம்பர் 3ம் தேதி நேரில் ஆஜராக வேண்டும் என் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் உச்ச நீதிமன்ற நீதிபதி விக்ரம் நாத் தலைமையிலான அமர்வு



முன், மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா நேற்று ஆஜராகி, “பதில் மனு தாக்கல் செய்யாத மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் நேரில் வருவதற்கு பதிலாக காணொலியில் ஆஜராக அனுமதிக்க வேண்டும்” என முறையிட்டார்.

முறையீட்டை நிராகரித்த நீதிபதிகள், “விலங்கு கருத்தடை விதிகளை நாடாளுமன்றம் ஏற்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. இது தொடர்பாக பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டோம். அதற்கும் நடவடிக்கை இல்லாமல் தூங்கிக் கொண்டுள்ளனர். நீதிமன்ற உத்தரவுக்கு மதிப்பு இல்லை. நேரில் வந்து விளக்கம் அளிக்கட்டும்” என்று திட்டவட்டமாக தெரிவித்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000